# அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட **“உண்ணாட்டரசிறை”** எனும் சட்டமூலம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது என்பதைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

1) சட்டமூலத்தில் 97 ஆம், 98 ஆம் மற்றும் 100(1)(உ) ஆம் பிரிவுகள் அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரைக்கு முரணானதெனவும்,

   167 ஆம் பிரிவு அரசியலமைப்பின் 12 ஆம், 13 ஆம் 14 (1) (ஏ) மற்றும் (ஐ)ஆம் உறுப்புரைகளுக்கு முரணானதெனவும்;

   மேற்படி பிரிவுகளில் உள்ள முரண்பாடுகள் அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பபடுவதன் மூலம் அல்லது உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு திருத்தங்களை மேற்கொள்வதன்மூலம் நீக்கிக்கொள்ளப்படமுடியும்;

2) 200 ஆம் பிரிவு அரசியலமைப்பின் 3 ஆம் மற்றும் 4 ஆம் உறுப்புரைகளுக்கு முரணானதெனவும் அது அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப விசேட பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்படுவதுடன், அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டுமெனவும்

உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.